

மக்களவை சபாநாயகராக தேர்வு செய்யப்பட்டுள்ள ஓம் பிர்லாவுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பாக தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் வாழ்த்து தெரிவித்து, மலர்க் கொத்து மற்றும் வாழ்த்து மடலை வழங்கினார்.

கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களை விடுவிக்க

இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்!

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் கடிதம்!

புதுடெல்லி, ஜூன் 29-

மீனவர்களின் நலன் காக்க ஒன்றிய அரசு முன்னுரிமை அளித்து வருகிறது என ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவது மற்றும் படகுகள் பறிமுதல் செய்யப்படுவது தொடர்பாக கடந்த சில தினங்களாக ஒன்றிய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியிருந்தார். இதற்கு நேற்று பதில் கடிதம் எழுதியுள்ள ஒன்றிய அமைச்சர், "மீனவர்கள் பிரச்சனை தொடர்பாக நீங்கள் ஜூன் 19, 24 மற்றும் 25ம் தேதிகளில் எழுதிய கடிதங்கள் கிடைத்தன. ஜூன் 26ஆம் தேதி யின் விவரங்களின்படி, 34 இந்திய மீனவர்கள் இலங்கையில் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஆறு பேர் தண்டனை பெற்று தண்டனை சிறைவாசம் அனுபவித்து வருகிறார்கள்.

கொழும்புவில் உள்ள இந்திய தூதரகம், யாழ்பாணத்தில் உள்ள துணைத் தூதரக அதிகாரிகள் துரிதமாக செயல்பட்டு, கைது செய்யப்பட்டவர்களை முன் கூட்டியே விடுவிக்க உரிய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மீனவர் சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த கடந்த 10 ஆண்டுகளாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்க இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். மீனவர்களின் நலன் காக்க ஒன்றிய அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. இந்திய மீனவர்களின் நலன் மற்றும் பாதுகாப்புக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்று நீங்கள் உறுதியாக நம்பலாம்' என்று கூறியுள்ளார்.

'நான் முதல்வன்': 1 இலட்சத்து 39 ஆயிரம் பேருக்கு பணி ஆணைகள் - முதல்வருக்கு கிடைத்த வெற்றி! சின்னமனூர் ஒன்றியத்தில்

விவசாய நிலங்களுக்கு தண்ணீர் கொண்டுசெல்ல குழாய் இணைப்பு அமைத்து தாரீர்!

பேரவையில் – கம்பம் தொகுதி உறுப்பினர் கம்பம் நா.ராமகிருஷ்ணன் கோரிக்கை!

சென்னை, ஜூன் 28-

'நான் முதல்வன்' 1 இலட்சத்து 39 ஆயிரம் பேர் பணி ஆணை பெற்றிருப்பது - முதல்வருக்கு கிடைத்த வெற்றி என்றும் சின்னமனூர் ஒன்றியத்தில் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்ல குழாய் இணைப்பு தாரீர் என்றும் சட்டப் பேரவையில் கம்பம் நா.இராமகிருஷ்ணன் பேசுகையில் குறிப்பிட்டார்.

உயர் கல்வி, பள்ளிக் கல்வி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கையில் கம்பம் தொகுதி உறுப்பினர் கம்பம் நா. இராமகிருஷ்ணன் பேசிய தாவது:-

நா. இராமகிருஷ்ணன்: நான்கு தலைமுறை தமிழர்களின் அக வாழ்விலும், புற வாழ்விலும் இரண்டறக் கலந்து, அவர்தம் உயர்வே தன் வாழ்நாள் இலட்சியமாக ஓயாமல் உழைத்த உத்தமர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் துயில்கொள் ளும் இடம் நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாம் சுதந்திரப் போரில் பங்கேற்று, அவசரம் எனும் நெருப்பாற்றில் நீந்தி கரையேறிய, மெழுகுவர்த்தி தலைவர், இந்தியாவின் ஜனநாயக தீபம் அணைந்து விடாமல், அதை காத்திட, 'இந்தியா' கூட்டணி அமைப்பதற்கு கருவாக இருந்து வியூகம் அமைத்த அன்புத் தலைவர், ஈரோடு வேங்கையின் துணிவும், காஞ்சித் தலைவனின் கனிவும், ஆரூர் சோழனின் ஆற்றலும் ஒருங்கே அமையப் பெற்று, திராவிட மாடல் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் நல்லாட்சி செய்துக் கொண்டிருக்கிற நம் தலைவர், முதல்வர் அவர்களுக்கு எனது வணக்கம், பாராட்டுகள். (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் அவர்கள் எடுக்கக் கூடிய அனைத்துத் திட்டங் களுக்கும் உறுதுணையாக இருந்து, தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி, பிச்சம்பட்டியில் கிராம சபையில் கலந்து கொண்டு, வெற்றிப் பயணத்தை துவக்கி, அன்றைய தினத்திலிருந்து இன்றைய நாள் வரையில் நாடாளுமன்றத் தொகுதிகளில் 234 தொகுதிகளிலும் சூறாவளி சுற்றுப் பயணம் செய்து, 100 சதவிகிதம் வெற்றிக்கு வித்திட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், அன்பு சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

திறன் மிகுந்த மனித வளம்!

நம்முடைய முதல்வர் அவர்கள் கல்வியைக் குறித்து இரண்டு செய்திகளை சொல்கின்றார். மிகத் தெளிவான சிந்தனை; எல்லாம் அடங்கியிருக்கின்றது.

'Education is a tool for social change', மனித சமுதாயத்தை மாற்றியமைக்கக் கூடிய வல்லமைக் கொண்ட கருவிதான்

கல்வி என்ற ஒரு கருத்து. 'Knowledge is one's own power', அறிவு என்பது ஒவ்வொரு தனி மனிதனின் சக்தியாக அளவிடப்படுகின்றது என்ற கருத்தை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார். இது முதல்வர் அவர்கள் வணக்கத்திற்குரிய மேயராக இருந்தபோது, சென்னை மாநகராட்சியில் L.K.G., U.K.G., மழலையர் பள்ளியைத் துவக்குவதற்கும், இன்றைக்கு பேராசிரியர் அன்பழகனார் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வகுப்பறைகள் கட்டுவதற்கும் தொடர்பு இருக்கின்றது. கோத்தாரி குழு உறுப்பினர் சொன்னதைப் போல, The future citizen of எதிர்கால வகுப்பறையின் இருக்கைகள் எதிர்கால இந்தியாவில் இருக்கின்றது என்ற கருத்துதான் அன்றைக்கே மழலையர் பள்ளியை அவர் துவங்கினார். அவர் காலத்தில் தான் சமுதாயக் கல்லூரியும் துவக்கப்பட்டது.

கிராமத்திலிருந்து London நான் முதல்வன் திட்டம். நான் முதல்வன் திட்டம் என்பது தண்ணீரில் மறைந்திருக்கும் மின்சாரம்; ஆற்றல். மண்ணில் மறைந்திருக்கும் பேரூட்டசத்து; உணவு.

அதைப்போல, ஒவ்வொரு மனிதனின் உள்ளே இருக்கின்ற ஆற்றலை வெளியே கொணர்ந்து, அந்த ஆற்றலுக்கேற்ப திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கி, அந்தப் பயிற்சியின் மூலமாக இந்தச் சமுதாயத்திற்கு திறன் மிகுந்த மனித வளத்தை தருவதுதான் 'நான் முதல்வன்' திட்டம். இதைத்தான் துறவி விவேகானந்தர் 'You are the creator of your own destiny. All the strength and inspiration you want is within you' என்று மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கின்றார்கள். 'நான் முதல்வன்' திட்டத்தின்கீழ் 28 இலட்சம் மாணவர்களுக்கு பயிற்சி தந்து, கிட்டதட்ட 1 இலட்சத்து 39 ஆயிரம் பேர் இன்றைக்கு பணி ஆணைப் பெற்று இருப்பது 'நான் முதல்வன்' திட்டத்தைக் கொண்டுவந்த நம்முடைய முதல மைச்சர் அவர்களுக்கு வெற்றி.

முதல்வருக்கு பாராட்டுகள்!

அதைப்போல, இன்றைக்கு 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலமாக, British Council, Londonஉடன் இணைந்து Scholars for Outstanding Undergraduate Talent in Tamil Nadu (SCOUT) 25 மாணவர்கள் Englandற்கு சென்று, Durham Universityல் தரவு அறிவியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகிய முன்னணி துறைகளில் கலந்து பயிற்சி பெற்று, இன்றைக்கு தாயகம் திரும்பிய அந்த மாணவர்களை நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் வரவேற்று இருக்கின்றார்கள், பாராட்டுகள்.

Pierre de Coubertin என்பவர் France நாட்டைச் சார்ந்தவர். 1,400 ஆண்டுகளாக முடக்கப்பட்டி ருந்த Olympic விளையாட்டை 1896 ஆம் ஆண்டு Greece நாட்டிலே துவக்குவதற்கு காரணமாக இருந்தார். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், அவர் கூறிய கருத்து விளையாட்டு உடலையும், கல்வி மனதையும் பண்படுத்துகிறது. விளையாட்டும், கல்வியும் ஒருங்கிணைந்து இருந்தால் தான், கல்விச் சிறப் பாக அமையும் என்று Pierre de Coubertin சொல்லியிருக்கின்றார். இன்றைக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, CM Trophy மூலமாக, அதாவது முதலமைச்சர் கோப்பையின் மூலமாக 3 இலட்சத்து 76 ஆயிரம் மாணவ, மாணவிகள் 15 போட்டிகளில் கலந்து கொண்டு, தங்கள் திறமையை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். மேலும், ஆடவர் Hockey போட்டி, பெண்கள் Tennis போட்டி மற்றும் சென்னை உலக தரம் வாய்ந்த விளையாட்டு நகரம், Squash World Cup, Khelo India Youth Games என்று பல போட்டிகள் நடத்தி, (மணியடிக்கப்பெற்றது) எப்படி 'நான் முதல்வன்' திட்டம் இந்தியாவின் கிராமத்திலிருந்து London சென்றதோ அதைப் போல, நாளையதினம் கிராமத்தி லிருந்து Olympic மைதானம் சென்று, பல வெற்றிகள் குவித்திட இன்றைக்கு கட்டியம் கூறுவதா கத்தான் நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுடைய முயற்சியை நான் பாராட்டுகின்றேன். (மேசை யைத் தட்டும் ஒலி)

விவசாயிகளுக்காக இரண்டு திட்டங்கள்!

உரையை முடிப்பதற்கு முன்பாக ஒரு கோரிக்கை. நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு இருக்கின்றார்கள். மிக முக்கியமான கோரிக்கை; பல முறை சொல்லியிருக்கின்ற கோரிக்கை. சின்னமனூர் ஒன்றியத்தில் சட்ட விதியின்கீழ் ஆழ்துளைக் கிணறு அமைத்து, 200 விவசாயிகள் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் கொண்டு சென்றார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பு, குழாய் துண்டிக்கப்பட்டது. அவர்கள் பொருளாதாரரீதியாக கஷ்டப்படுகின்றார்கள். எனவே, தயவுகூர்ந்து விவசாயிகளின் கஷ்டத்தை உணர்ந்து, மீண்டும் தண்ணீர் கொண்டு செல்வதற்கு இணைப்பு தர வேண்டுமென்று தங்களை அன்போடு கேட்டுக் கொள்வதோடு, தொட்டாமாந்துறை கால்வாய் திட்டமும் நிலுவையில் இருக்கின்றது. இந்த இரண்டு திட்டங்களை மட்டும் நீங்கள் செய்து கொடுத்தால், அந்தப் பகுதி விவசாயத்தில் செழித்தோங்கும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

காலை உணவுத் திட்டம்!

காலை உணவுத் திட்டம். 'பசி வந்திட பத்தும் பறந்து போகும்'. 31,008 பள்ளிக்கூடங்களில் 18 இலட்சத்து 54 ஆயிரம் மாணவர்கள் இன்றைக்கு காலை உணவுத் திட்டத்தின் மூலமாகப் பயன் பெறுகிறார்கள்.

இந்த ஆண்டு அரசு உதவிபெறும் கல்லூரிகளில், பள்ளிக்கூடங்களில் 2 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் அந்தத் திட்டத்தில் பயனடைவதற்காக 600 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டம் கொண்டுவருவதற்குக் காரணம், அந்தக் குடும்பத்தின் தாய் அதிகாலையில் வேலை செய்வதாலும், அதேநேரத்தில், தாய் இல்லாத நிலை யிலும், தாய் நோயினால் படுத்திருக்கும் நிலை யிலும் காலை உணவு என்பது அந்த மாணவர்களுக்கு எட்டாகனியாக இருந்தது. காலை உணவு என்பது மிக முக்கியம். மாணவர்கள் பட்டினியாக இருக்கக் கூடாது. கற்றல் என்பது மிகக் கடினமான காரியம். எனவே, காலை உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்த நம்முடைய தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர்கல்வியில் முதலிடம்!

கல்லூரியைப் பற்றி. தேசிய அளவில் மாணவர்கள் சேர்க்கையில் இந்தியா சராசரி 28.4 சதவிகிதம் ஆகும். ஆனால், தமிழ்நாடு உயர் கல்வியில் தேசிய அளவில் மாணவர்களின் சேர்க்கை என்பது 51.4 சதவிகிதம் ஆகும். தேசிய அளவில் மாணவியர் சேர்க்கை 47.3 சதவிகிதம் ஆகும். தேசிய அளவில் உயர் கல்வி தரவரிசையில் இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம். அதேபோல, மாற்றுத் திறனாளிகள் பட்டம் பெறுவதிலும் தமிழ்நாடு முதலிடம். ஆராய்ச்சியில் முனைவர் பட்டம் பெறுவதிலும் தமிழ்நாடு முதலிடம். இப்படி உயர் கல்வியில் தேசிய அளவில் தமிழ்நாடு முதலிடம் பெற்று வருகிற நேரத்தில், அந்தத் திட்டம் இன்றைக்கு, உயர் கல்வியைச் சேர்ந்த அமைச்சர் அவர்களும், பள்ளிக் கல்வித் துறையைச் சேர்ந்த அமைச்சர் அவர்களும் திறம்பட செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். உயர் கல்வியின் வளர்ச்சிக்கு ஒரு விதை செடியாகி, அது மரமாகி வளர்வதற்கு நிலம்தான் ஆதாரம். அதைப்போல, உயர் கல்வியின் வளர்ச்சிக்கு நிலம் தான் ஆதாரம், பள்ளிக் கல்விதான் ஆதாரம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த பள்ளிக் கல்வியை செம்மையாக செதுக்கிக் கொண்டிருக்கிற பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு கம்பம் நா. ராமகிருஷ்ணன் உரையாற்றினார்.

சாதி ஒழிப்புப் போராளி – தியாகி இமானுவேல் சேகரனார் பிறந்தநாளை

இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு விழாவாக அறிவித்த முதல்வருக்கு நன்றி!

மக்கள் விடுதலைக் கட்சி தலைவர் சு.க. முருகவேல் ராஜன் அறிக்கை!

மதுரை, ஜூன் 29-

மக்கள் விடுதலைக் கட்சி நிறுவனர் - தலைவர் சு.க.முருகவேல் ராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சட்டப்பேரவையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை மானியக்கோரிக்கையில் அமைச்சர் வெள்ளக்கோவில் சுவாமிநாதன் அவர்கள் தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் சாதி, ஏற்றத் தாழ்வுகளை களைந்துசமூகசமத்துவமின்மையை போக்கி ஒரு சமூக நீதி சமத்துவ சமுதாயத்தை படைக்க அஞ்சாமல் போராடி தன் உயிரை தியாகம் செய்த தியாக சீலர் தியாகி இமானுவேல் சேகரன் அவர்களின் பெருமையை போற்றுகிற வகையில் அவரது பிறந்த நாளான அக்டோபர்09இராமநாதபுரம் மாவட்ட அளவில் அரசு விழாவாககொண்டாடப்படும்என்று அறிவித்துள்ளார்.

அடக்கப்பட்ட இன மக்களின்அடையாளத்தையும், சுயமரியாதையையும்நிலை நிறுத்த ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்களை அணி திரட்டி இறுதி மூச்சு வரை அடிபணியாமல் போராடிய தீரர் தியாகி இமானுவேல் சேகரனார் என்று தொடர்ந்து முழங்கி வரும் மக்கள் விடுதலை கட்சியின் முழக்கத்தை ஏற்று அவரின்புகழைப் பறைசாற்றுகிற வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் அரசின் தலைமகன் இந்திய நாட்டிற்கு சமூகநீதி தளத்தில்வழிகாட்டும்கலங்கரை விளக்காக திகழும் நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறுகாலகட்டங்களில் எமது தொடர்கோரிக்கைகளை ஏற்று தியாகி இமானுவேல்சேகரானார் அவர்களுக்கு பெருமை சேர்க்கும் வகையில்பலகாரியங்களை செய்துள்ளார்கள்.

அதில் குறிப்பாக 2018 ஆம்ஆண்டுஎதிர்கட்சிதலைவராக இருந்த காலகட்டத்தில் தியாகி அவர்களின் நினைவிடம் அமைந்துள்ள பரமக்குடிக்கு தளபதி. மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் வந்து அஞ்சலி செலுத்தி தியாகியாரின் நினைவிடத்திற்கு வருகை தந்த முதல் எதிர்கட்சி தலைவர் என்ற பெருமையை ஏற்படுத்தினார்கள்.தொடர்ந்து தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு அமைச்சர் உதயநிதிஸ்டாலின்அவர்களையும், நாடாளுமன்ற தி.மு.க தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களையும், ஏனையபிறஅமைச்சர்பெருமக்களையும்பெருமக்களையும் தொடர்ந்து தியாகியாரின் நினை விடத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர்11ஆம்நாள்அனுப்பி வைத்துமரியாதைசெய்துவருபவர் நமது முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள்.

எமது மக்கள் விடுதலைக் கட்சியின் 30 ஆண்டு கால தொடர் கோரிக்கையான தியாகி இமானுவேல் சேகரனாருக்கு முழுஉருவ வெண்கலச் சிலையுடன் கூடிய மணிமண்டபம், தியாகியாரின்நினைவைப்போற்றுகிற வகையில் அவரது பிறந்த நாள் அல்லது நினைவு நாள் அரசுவிழாவாகமுன்னெடுக்கப்படவேண்டும்என்பதை நாங்கள் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் தோழமைக்கட்சி என்ற அடிப்படையில்வலியுறுத்தி வந்தோம்.

எங்களது கோரிக்கையை ஏற்றுசென்றஆண்டு3கோடி ரூபாய் மதிப்பில் பரமக்குடியில் தியாகியார் அவர்களுக்கு மணி மண்டபம் கட்டப்படும்.என்றஅறிவிப்பை செய்து அதற்கான அடிக்கல்லையும், நாட்டியவர். நமது முதல்வர் தளபதி. மு.க.ஸ்டாலின் அவர்கள் தற்பொழுது இன்னும் ஒருபடி மேலே போய் தியாகியார் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர்09ல் இராமநாதபுர மாவட்ட அளவில் அரசுவிழாவாக கொண்டாடப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவித்திட செய்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்மிகப்பெரும்சமூக நீதி சரித்திரத்தை படைத்துள்ளார்.

இந்நேரத்தில் நான் மக்கள் விடுதலைக் கட்சியின் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு தபால் தலைவெளியிடப்பட்டதும் திமுகஅங்கம்வகித்தமத்திய காங்கிரஸ் ஆட்சியில் தான் என்பதையும் நான் நினைவு கூரகடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இந்த ஒப்பற்ற சாதனையை நான் உள்ள உவகையோடு வரவேற்று மகிழ்கிறேன்.தமிழ்நாட்டில் வாழும் கோடானு கோடி தேவேந்திரகுல வேளாளர் சமுதாய மக்கள் சார்பாகவும், மற்றும் மக்கள் விடுதலைக்கட்சி தொண்டர்கள், பொறுப்பாளர்கள்சார்பாகவும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளை மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்வதோடு நானும், மக்கள் விடுதலைக்கட்சியும், ஒட்டுமொத்த ஒடுக்கப்பட்ட மக்களும், முற்போக்கு இடதுசாரி முன்னணியினரும் என்றும், திமுக தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உறுதுணையாக தோளோடு, தோள்நிற்போம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு சு.க.முருகவேல்ராஜன்தனதுஅறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவில் மாநகராட்சி அலுவலகத்தில்

2024-25ஆம் நிதி ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தாக்கல்!

மேயர் ரெ.மகேஷ் தலைமையில்!

நாகர்கோவில், ஜூன் 29-

நாகர்கோவில் மாநகராட்சி, மாமன்ற கூட்ட அரங்கில் 2024-25ம் நிதி ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் மாமன்ற கூட்டம் 27.06.2024, வியாழக்கிழமை அன்று கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது. ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் திருமதி. மேரி பிரின்சிலதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் 2024-25ம் நிதியாண்டுக் கான நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டு ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா மாநகராட்சி மேயர் ரெ. மகேஷிடம் வழங்கினார். அதனை மாநகராட்சி மேயர் மாமன்ற கூட்டத்தில் தாக்கல் செய்தார். கூட்டத்தில் நகரமைப்பு அலுவலர் வேலாயுதம், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நாகர்கோவில் மாநகராட்சியில் வருவாய் மற்றும் மூலதன நிதியாக இந்த ஆண்டு ரூ.147.81 கோடி, குடிநீர் வடிகால் மூலதன நிதியாக ரூ. 53.08 கோடி என்று ரூ. 200 கோடியே 99 லட்சம் வருவாய் கிடைத்துள்ளது. அதுபோன்று வருவாய் மற்றும் மூலதன செலவினம் ரூ. 155.98 கோடி, குடிநீர் வடிகால் செலவினம் ரூ. 54.65 கோடி என மொத்தம் ரூ. 210.61 கோடி செலவினமாக உள்ளது. இதன்படி பற்றாக்குறை ரூ. 9.62 கோடி ஆகும்.

கூட்டத்தில் நாகர்கோவில் மாநகர பகுதியில் குடிநீர் திட்டப்பணிகள், பாதாள சாக்கடை திட்டப்பணிகள் தொடர்பாக உள்ள புகார்கள் மற்றும் 52 வார்டு மாமன்ற உறுப்பினர்களும் அவரவர் வசிக்கும் பகுதிகளில் புதிதாக குடிநீர் குழாய் பதிக்காத இடங்களையும் பட்டியலிட்டு மாநகராட்சி ஆணையரிடம் கொடுக்க வேண்டும். மாநகராட்சி ஆணையர் குடிநீர் வடிகால் வாரிய அதிகாரியிடம் அந்த பட்டியலை கொடுத்து குடிநீர் இணைப்பு வழங்க உடனடி நடவடிக்கை மேற்கொள்வார். அதனை தொடர்ந்து மாநகராட்சி பகுதியில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தின் இறுதியில் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் "இந்தியா" கூட்டணிக்கு 40-க்கு 40 இடங்களில் வெற்றியை பெற்று தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த மன்றம் நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.